முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1174

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

16.12.2022, வெள்ளிக்கிழமை

1. பேருலகை காக்க வந்த ஞானியே
பிரம்ம ஞான சூட்சுமத்தின் தவசியே
ஆறுதலாய் உலக மக்களுக்கு
அழியாமை தருகின்ற மாதவசியே
2. தவசியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தக்கபடி ஞான அறிவுரை ஆசி
அவனியில் சுபகிருது சிலை திங்கள்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் முதல் நாள் 16.12.2022, வெள்ளிக்கிழமை)
அறிவிப்பேன் அரங்கனுக்கு சக்தி கூட
3. சக்திமிகு அரங்கன் தர்மத்தில்
சரவண பவனே சரவணச்சுடராக ஆறுமுகன் யான்
பக்திகூட்டி தொண்டர்களுக்கு இன்னும் பலம்
பலவாறு சூட்சும சக்தியாக வழங்கி
4. வழங்கியே அரங்கன் தொண்டர்களையும்
வல்லமைமிக்க அரங்கன் தர்மத்தையும்
களங்கமற ஆறுமுகன் காத்து வருகின்றேன்
கலியுகத்தில் தர்மத்தை வளர்த்து வருகின்றேன்
5. வருகவே தர்மம் வளரவளர
வையகத்தில் உலக மாற்றமாக
முருகப்பெருமான் யான் இனிதே
முழுமைபெற்ற ஞானி அரங்கன் வழி நடத்திக் காப்பேன்
6. காப்பாக அரங்கனை ஏற்ற மக்களுக்கு
கலியினில் ஞானியாகும் வாய்ப்பு உண்டு
ஒப்புகொண்டு அரங்கன் தர்மத்தை காப்பவர்க்கு
உலகினில் இனி பிறவாப்பேறும் உண்டு
7. பேருபெற்ற அரங்கன் தர்மத்தை
பிழையின்றி உலகோர் உலகமாற்றமாக
வருமுலகில் இன்னும் கிளைகள் பெருக்கி
வல்லமைபட செய்து வருதல் காண
8. காணவே உலகம் அற்புதம்தன்னை
கட்டாயம் அரங்கன்வழி கண்டு தேறும்
ஞானயுகமாற்றமாகவும் உலகம் நன்மைபட கண்டு
ஞானிகள் ஆட்சிதனை பெறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–